# தவக்காலம் முதல் வாரம் - ஞாயிறு

# இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறைவனின் பாடுகளை நினைத்து அவர் பாதையில் பயணப்பட இன்றைய தவக்கால முதலாம் ஞாயிறு திருப்பலிக்கு வந்திருக்கும் அனைவரையும் வரவேற்கிறோம்.

“காலம் நிறைவேறிவிட்டது; இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது; மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்று நம்மை மனமாற்றத்திற்கு அழைக்கிறது இன்றைய தவக்கால முதலாம் ஞாயிறு. இத்தவக்காலத்தின் முக்கிய நோக்கமே மனமாற்றம் தான். நம் மனமாற்றம் நம்முள் கறையை நீக்கி கருணையை உதிக்கச் செய்கிறது.

கருவுற்றால் தனது குழந்தைக்கு மட்டுமே தாயாக முடியும். கருணையுற்றால் இந்த அகிலத்திற்கே அன்னையாக முடியும்.

கன்னியான மரியாள் கருணை மைந்தனை இவ்வுலகிற்கு தந்து அகிலத்திற்கே அன்னையானாள். இத்தவக்காலத்தில் இதயம் அன்பு, அன்பு என்று துடிக்க, கண்களில் கருணை ஒளி தெறிக்க, ஈகைக்காக கரங்கள் இசைந்திட, இறைவனிடம் அருளைப் பெற வேண்டுவோம்.

ஈகையின் மாண்பை திருவள்ளுவர்,

> அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
>
> பெற்றான் பொருள்வைப் புழி

என்கிறார். இதன் பொருள் யாதெனில் பொருள் இல்லாதவனின் பசியைத் தீர்க்கும் ஈகைச் செயலே பசியை நீக்கிய செல்வந்தனின் செல்வத்தை சேர்த்து வைக்கும் பெட்டகம். எனவே மனமுவந்து பிறருக்கு தந்திட முன்வருவோம்.

இன்றைய முதல் வாசகத்தில நோவாவின் நற்சிந்தனை மற்றும் செயல்களாலும் வெள்ளப்பெருக்கினின்று தன் குடும்பத்தோடு பாதுகாக்கப்படுகிறார். இறைவன் அன்போடு நோவாவிடம் உடன்படிக்கையும் செய்கிறார். நாமும் மனமாற்றம் எனும் ஆடையை அணியும் போது நம்மீதும் இறைவனின் வானவில் உதிக்கிறது. நம்மையும் அணி சேர்த்து அழகாக்குகிறது. அந்த வானவில்லை அணிந்து கொள்ள ஆயத்தமாவோம் என்று தவக்காலம் நம்மை அழைக்கிறது.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் கிறிஸ்து நம் பாவங்களின் பொருட்டு இறந்து கடவுளின் வலப்பக்கம் வீற்றிருக்கிறார் என்கிறார் பவுல். திருமுழுக்கினால் பாவத்தின் பிடியில் இருந்து விடுபட்டு, தூய ஆவியை, ஆவியின் கொடைகளை பெற்றுக் கொள்ள நோவாவைப் போல் இதயப் பேழையை அன்பு என்னும் உளியால் வடிவமைப்போம். பாவமெனும் வெள்ளப்பெருக்கிலிருந்து மனமாற்றம் எனும் பேழையால் மீட்கப்படுவோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் பாலைநிலத்தில் இயேசு சாத்தானால் சோதிக்கப்படுகிறார். இறை மைந்தனை வெற்றிக் கொள்ள இயலாது என்று தெரிந்த

சாத்தான் நம்மை சோதனைகளால் தாக்குகிறது. சோதனைகள் மத்தியில் நம் சாதனை நாயகனை, உலகத்தை மீட்டவரை பிடித்துக் கொள்வோம். இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது; மனம் மாறுங்கள் என்ற இறைவனின் குரலை இதயத்தில் நிறுத்துவோம்.

சோதனைகள் உங்களை புண்படுத்தினால் தோற்று விடுவீர்கள் பண்படுத்தினால் ஜெயித்து விடுவீர்கள் என்ற வரிகளைக் கருத்தில் கொள்வோம். மனமாற்றம் அடைந்து மன்னவனின் வெற்றியில் இணைவோம் என்ற விசுவாசத்தோடு திருப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. மனம் மாறுங்கள் என்று அழைப்பவரே எம் இறைவா!

எம் திருச்சபைப் பணியாளர்கள் உலகெங்கும் சென்று மனமாற்றம் அடைய விடுக்கும் அழைப்பை ஏற்றுக்கொண்டு, உம்மைப் பின்பற்றும் மக்களினம் பெருக அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எம் பாவங்களிலிருந்து மீட்க இன்னுயிரை ஈந்தவரே எம் இறைவா!

நாங்கள் எங்கள் பாவங்களையும், குற்றங்களையும் உணர்ந்து மனமாறவும், உமது கருணைக் கரங்களால் தொடப்பட்டு, புது வாழ்வைப் பெற்றுக் கொள்ளவும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய ஆவியால் சாத்தானின் சோதனைகளை வென்றவரே எம் இறைவா!

நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் கணினி உலகில் தொழில்நுட்பம், ஊடகங்களை ஆக்கப்பூர்வ செயல்களுக்காக மட்டும் பயன்படுத்தவும், தீய பழக்கவழக்கங்களில் சிக்கிக் கொள்ளாமல், உமக்கு பிரியமான வாழ்வை மேற்கொள்ளும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அருட்கொடை வள்ளலே இறைவா!

எம் பகுதியில் வாழும் மக்களை உம்மிடம் தருகின்றோம். எமக்கு போதிய மழையையும், நல்ல கால சூழ்நிலையையும் தந்து, வேளாண்மை சிறக்கவும், படிக்கும் பிள்ளைகள் ஞானத்தில் வளரவும், குடும்பங்களில் சமாதானம் நிறைந்திருக்கவும், இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com